ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2047/29 - 2017 නොවැම්බර් මස 29 වැනි බදාදා - 2017.11.29
*2047/29 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இலக்கம்: DSO/ HOM/ LAC/ 102.
காணி அமைச்சின் இலக்கம்: 4-3/17 2017/E/142.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆந் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், இல. 587, மத்தேகொட மேற்குக் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2017.10.25 ஆம் திகதி உறுதிப்படுத்திய வரைபட இலக்கம் 520008 இன் பகுதி இல. 06 இல் துண்டு இல. 115 எனக் காணப்படும் காணித்துண்டின் எல்லைகள் :

*01.* **துண்டு இல. 115**
காணியின் பெயர்: கெகுணகஹவத்தை; விபரம்: - ; ஆரம்ப உரிமை கோருபவர்: கொழும்பு 08, டீ. எஸ். சேனாநாயக்க மாவத்தை, இல. 75 இல் அமைந்துள்ள, பிரைம் லாண்ட்ஸ் பிறைவெட் லிமிட்டெட் நிறுவனம்; விஸ்தீரணம்: 4.0469 ஹெக்டயார் (10 ஏக்கர்).

வடக்கு : வரைவு 5200029 இல் பகுதி 03, துண்டுப் பகுதி இல. 114 மற்றும் வரைவு 520029 இல் பகுதி 01 (வீதி, வீதிகள் அபிவிருத்தி அதிகார சபை); கிழக்கு: துண்டுப் பகுதி இல. 114 மற்றும் வரைவு 520029 இல் பகுதி 01 (வீதி, வீதிகள் அபிவிருத்தி அதிகார சபை) மற்றும் துண்டுப் பகுதி 116; தெற்கு: துண்டுப் பகுதி இல. 116, 6 மற்றும் பகுதி 02 ; மேற்கு: பகுதி 02, வரைவு 520029 இல் பகுதி 07 மற்றும் வரைவு 520029 இல் பகுதி 03.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு ஹோமாகமை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும் மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்டஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஜீ. எஸ். கே. கன்னங்கர,
பிரதேச செயலாளர்,
ஹோமாகமை.

பிரதேச செயலகம்,
ஹோமாகமை,
2017, நவெம்பர் 24.

*12 - 448*


இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.